இலங்கை வெளிநாட்டு சேவைக்கான ஆட்சேர்ப்பில் நேர்மைத்திறன்

பணிநிலை அறிக்கை

2008 ஜூன் 11

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07
Tel/Fax: 0112-501474, 0112-592287
Email: tisl@sltnet.lk
Web: http://www.tisrilanka.org

# இலங்கை வெளிநாட்டு சேவைக்கான ஆட்சேர்ப்பில் நேர்மைத்திறன்

## பரிபாலனம் பற்றிய விவாதம்

இலங்கையில் வெளிநாட்டுச் சேவைக்கான நியமனங்கள் பல்வேறு மட்டங்களிலும் விவாதத்திற்குரிய விடயமாக உள்ளன. முக்கியமாக முன்னாள் பிரபல ராஜதந்திரிகளினால், ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள பல கட்டுரைகள், இந்த வழிமுறையில் உள்ள நேர்மைத் திறன் குறித்தும் நியமனங்களினால் நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள, தீங்கான மாறுபட்ட பாதிப்புகள் பற்றியும் பல விவகாரங்களை எழுப்பியுள்ளன. இந்த விடயங்கள் சிறந்த பரிபாலனத்துடன் இணைந்தவையாகும். இதனால் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா (TISL), பொது மக்கள் தீவிரமாகக் கலந்துரையாடுவதற்கென ஆட்சேர்த்தல் செயன்முறையிலுள்ள பல்வேறு முக்கிய விவகாரங்களை பகுப்பாய்வு செய்யும் இந்தப் பணிநிலை அறிக்கையை வெளியிடப்படுகின்றது.

### 1. முகவுரை

#### 1.1. வரலாற்று நோக்கு

ராஜதந்திரத்தை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஒரு அரசின் வரைவிலக்கண அம்சங்களில் ஒன்றாகும். முதலாவது நகர - அரசுகள் உருவான காலம் தொடக்கம் ராஜதந்திரம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. முதலில் ராஜதந்திரிகள் குறிப்பிட்ட பேச்சு வார்த்தைக்காக மாத்திரம் அனுப்பப்பட்டனர். தமது பணி முடிந்ததும் அவர்கள் உடனடியாகத் திரும்பி விடுவார்கள். ஏனைய நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்த முற்படுகையில், சட்டபூர்வ அந்தஸ்த்தை அவர்களுக்கு வழங்கும் வகையில், ராஜதந்திரிகள் ஆட்சி செலுத்துவோரின் குடும்ப உறவினர்களாக அல்லது மிகுந்த உயர்தரத்தவராக இருந்தனர்.

நவீன ராஜதந்திரத்தின் மூலமானது வட இத்தாலிய நாடுகளில் ஆதி மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்ததை ஒத்ததாகும். முதலாவது தூதரகங்கள் 13 ஆவது நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டன[1]. நவீன ராஜதந்திர மூலக்கூறுகள் சிறிது சிறிதாக உலகின் ஏனைய பகுதிகளுக்குப் பரவின ஆனால் அப்பொழுது தடைகள் ஏற்படாமல் இல்லை. பிரான்ஸுக்கு எதிராக திட்டமிட்டதாக குற்றம் சாட்டி பல பிரிட்டிஷ் ராஜதந்திரிகளை சிறையிலிட்ட நெப்போலியன் ராஜதந்திர காப்புரிமையை அங்கீகரிக்கவில்லை. நெப்போலியன் வீழ்ச்சியடைந்ததும் 1815 வியன்னா காங்கிரஸ், சர்வதேச ராஜதந்திர தரத்தை ஏற்படுத்தியது. அது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் மேலும் விரிவடைந்தது.

உள்ளடக்கம்

1. முகவுரை
2. வெளிநாட்டு சேவைக்கான விதிமுறைகளும், சில பின்னணித் தகவல்களும்.
3. நியமனங்கள் பற்றிய பொது மக்களின் கண்டனங்கள்
4. சட்ட நிலைமை
5. தகவல்கள் முடக்கப்படுதல்.
6. வெளிநாட்டு சேவைக்கான நீதி விரோத நியமனங்களின் விளைவுகள்.
7. வெளிநாட்டு சேவை எதிர்பார்ப்புகள்.
8. முடிவுகள்.
9. விதந்துரைகள்

[1] www.wikipedia.org

பல நூற்றாண்டு காலமாக ராஜதந்திரம் பரிணாம வளர்ச்சி கண்டதுடன் ராஜதந்திரம் என்பதற்கான வரைவிலக்கணம் அங்கீகரிக்கப்பட்டு நினைவில் கொள்ளத்தக்க ஒன்றாகியது. வெலஸ்ரறின் மூன்றாவது புதிய சா்வதேச இரு வரைவிலக்கணங்கள் வருமாறு.

1. பரஸ்பரம் திருப்திகரமான நிபந்தனைகளை எய்துவதற்கு நாடுகளிடையே பேச்சுக்களை நடாத்துவதற்கான வினைத்திறனும் வழி முறையுமாகும்

2. விவகாரங்களை நடத்துவதில் பகைமையை ஏற்படுத்தாமல், நன்மைகளை அடைந்ததில் முன் திறமை அல்லது தந்திரத்தைக் கொண்டிருத்தல்.

## 1.2 இலங்கை ராஜதந்திர சுருக்கம்

இலங்கை சா்வதேச ராஜதந்திரத்திற்கு கி.மு மூன்றாவது நூற்றாண்டில் அறிமுகமானது மௌரிய ராஜ்யத்தின் இந்திய சக்கரவா்த்தி அசோகனுக்கும் இலங்கை அரசனான அனுராதபுரத்தை ஆண்ட மன்னா் தேவநம்பியதீசனுக்கும் இடையில் பௌத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த அசோகனின் மகன் மஹிந்த மகள் சங்கமித்த ஆகிய இரு தனிப்பட்ட தூதுவா்கள் மூலம் இந்த அறிமுகம் இடம்பெற்றது. இலங்கையின் ஆதி ராஜதந்திரத்திற்கு புவியியல், வரலாற்றுப் பரிமாணங்கள் உள்ளன.[2]

ஆசியாவில் ஐரோப்பிய வல்லரசுகள் காலடி வைத்ததும் ( போா்த்துக்கேய, டச்சு, பிரிட்டிஷ்) இலங்கையின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது.[3] இவா்களின் வருகையே இலங்கைக்கு வெளிநாட்டு ஆட்சியின் முதலாவது யதாா்த்த அனுபவமாகும். இலங்கையை ஆட்சி செய்த நாட்டிலேயே வெளிநாட்டுக் கொள்கையும், வெளிநாட்டு உறவுகளும் தங்கியிருந்தன. 1948 இல் சுதந்திரம் கிடைத்ததும் வெளிநாட்டுக் கொள்கையானது அதி முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகியது. இலங்கை பல்வேறு அரசியல் தலைமைத்துவங்களின் கீழ் வெளிநாட்டு விவகாரங்களில் பல கட்டங்களைக் கடந்துள்ளது. அந்தப் பல்வேறு கட்டங்களின் நன்மைகள், தீமைகள் பற்றி இந்த அறிக்கையில் கவனம் செலுத்தப்படவில்லை.

வெளிநாட்டுக் கொள்கை வகுப்பதில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றிருந்த அதன் இரு ஆட்சி அமைப்பொழுங்குகளை நினைவில் கொள்ள வேண்டும்.

(i) சுதந்திரம் கிடைத்த பின்னா், ஆட்சியிலிருந்த கட்சி அல்லது கட்சிகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன. அவை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பாதித்தன.

(ii) வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய பகுதிகளில் இரு பிரதான கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கிடையில் அடிப்படை உடன்பாடு இருந்து வந்துள்ளது. (உதாரணமாக காலனித்துவ எதிர்ப்பு, ஆயுதப் பரிகரணம், ஆயுதக் கட்டுப்பாடு, வல்லரசுகளுடன் தலையீடு செய்யாமை)

## 1.3 ராஜதந்திர - தூதுக்குழுக்களும் தரப்படுத்தலும்.

முதற்கட்ட ராஜதந்திர அமைப்புகள் போன்றல்லாது, நாடுகளிடையே உறவுகளை கிரமப்படுத்துவதற்கான ராஜதந்திர நடைமுறைகளும், வழிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு நாடு மற்றொரு நாட்டில் பல வகையான ராஜதந்திர தூதுக்குழுக்களை கொண்டிருக்கக்கூடும். தூதரகங்கள்[4], உயா் ஸ்தானிகராயங்கள்[5], நிரந்தர தூதரகங்கள்[6], Consulate Generals[7], கௌரவ Consulates[8] Consuls[9]
நவீன ராஜதந்திர நடைமுறையில் தூதுவா் மட்டத்தின் கீழான பல ராஜதந்திர தரங்கள் உள்ளன.

[2] www.slmfa.gov.lk வி.எல்.பி மென்டிஸ், இலங்கை வெளிநாட்டு உறவுகள், 1965 முற்பகுதியிலிருந்து திஸ்ஸர பிறக்சாகக்யோ.
[3] முதலாவது வெளிநாட்டவா் ஆட்சி சோள ராஜ்யம் 1017 தொடக்கம் 1065 கி.பி காலம் வரையொன்று சிலா் வாதிக்கின்றனா்.

[5] ஆலோசனை சேவைகள் உட்பட பூரணமான சேவைகளை பொதுவாக வழங்கும் மற்றுமொரு நாட்டில் உள்ள தலைநகரத்தில் உள்ள ராஜதந்திரத் தூதுக்குழு
[6] பொதுநலவாய நாடு ஒன்றின் தூதரகம் மற்றுமொரு பொதுநலவாய நாட்டில் செயற்படுதல்.
[7] பிரதான சா்வதேச அமைப்பு ராஜதந்திர தூதரகங்களுக்கான.
[8] ஆலோசக சேவை உட்பட பூரணமான சேவைகளை வழங்கும் தலைநகரமாக இல்லா ஏனைய பிரதான நகரில் உள்ள ராஜதந்திரத் தூதரகம்.
[9] Consulate general போன்ற ராஜதந்திரத் தூதரகம், ஆனால் பூரண சேவைகளை வழங்காதது.

தூதுவர்கள் (அல்லது பொதுநலவாய தூதுக்குழுக்களிலுள்ள உயர் ஸ்தானிகர் மற்றும் நிரந்தர பிரதிநிதிகள்)
அமைச்சர்
அமைச்சர் - ஆலோசகர்
ஆலோசகர் (Counselor)
முதலாவது செயலாளர்
இரண்டாவது செயலாளர்
மூன்றாவது செயலாளர்
இணைப்பாளர் (Attache)
உதவி இணைப்பாளர் ( Assisstant Attache)

### 1.4 ராஜதந்திர ஊழியர்களை வேலைக்கு அமர்த்தல்

தகுந்த தரத்திலுள்ள நபரை அடையாளம் காண்பதை உறுதி செய்யவென ராஜதந்திர பதவிகளுக்கு ஆட்களை தெரிவு செய்து வேலைக்கமர்த்துவதில் கவனமான பரிசீலனை நடைமுறைகள் அவசியமாகும். இதைத் திறம்பட ஆற்றுவதற்கு வளர்ந்த ஜனநாயக நாடுகளில், சகல ராஜதந்திர ஊழியர்களையும் வேலைக்கு அமர்த்துவதற்கான அடிப்படை விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக அமெரிக்க சமஷ்டி அரசாங்கத்தினால் ராஜதந்திர ஊழியர்களை தெரிவு செய்வதற்கென மூன்று முக்கிய நடவடிக்கைகள் உள்ளன. அதன் சுருக்கம் வருமாறு.

**தெரிவுக்கு முற்பட்ட நடவடிக்கை**

1. பதிவு செய்தல் - விண்ணப்பமும் சொந்த விபரங்களும்.
2. வெளிநாட்டு சேவை அலுவலர் பரீட்சை
3. தகைமை மதிப்பீட்டு குழு
4. வாய் மூல பரிசோதனை மதிப்பீடு.

**தெரிவு செய்யப்பட்ட பின்னரான மேலதிக நடவடிக்கைகள்**

5. மருத்துவ ரீதியான அனுமதி
6. பாதுகாப்பு ரீதியான அனுமதி
7. இறுதிப் பரிசீலனைக் குழு
8. பதிவேடு.

**முக்கிய கவனிப்புகள்**

1. வெளிநாட்டு மொழிகள்
2. தொழில்துறை தெரிவு
3. வலது குறைந்த விண்ணப்பதாரிகள்
4. துறையில் நீடித்த அனுபவமுள்ளோரின் விருப்பம்
5. வெளிநாட்டு சேவைப் பணிக்கான அர்ப்பணிப்பு

### 1.5 ராஜதந்திர ஊழியர்களை வேலைக்குச் சேர்ப்பதில் இலங்கையில் பூர்வாங்க அனுபவம்.

1949 ஆம் ஆண்டு தொடக்கம் 1959 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் முதலாவது வெளிநாட்டு சேவைக் குறிப்பு நிபந்தனைகளின்படி 32 உத்தியோகத்தர்கள் சிலோன் ஓவர்சீஸ் சேவைக்கு முதனிலைத் தேர்வாளராகத் தெரிவு செய்யப்பட்டனர். சிலோன் ஓவர்சீஸ் சேவையின் ivஆம் தர உத்தியோகத்தர்களாக இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

1949 ஆம் ஆண்டு வெளிநாட்டு சேவைக் குறிப்பானது 1959 வெளிநாட்டு சேவைக்குறிப்புக்கு பதிலாகக் கைக்கொள்ளப்பட்டது. இது வெளிநாட்டு சேவைக்கு உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கான பரீட்சையை மீளாய்வு செய்யும் நிலையை ஏற்படுத்தியது. இலங்கை வெளிநாட்டு சேவைக்கு 1949 தொடக்கம் 1973 வரை மொத்தம் 73 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டனர்.

1974 ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் இலங்கை வெளிநாட்டு சேவைக்கான ஆட்சேர்ப்புத் திட்டம், மறுசீரமைக்கப்பட்டது. இதன் மூலம் ஆங்கில மொழிமூலமான பரீட்சைகளுடன், சிங்கள, தமிழ் மொழி மூலம் கல்வித் தகைமை பெற்ற பட்டதாரிகளுக்கு, சிங்கள, தமிழ்மொழி மூலமான பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் சி.டபிள்யூ.சி.டபிள்யூ கன்னங்கராவின் தீர்க்க தரிசனத்திற்கு அமைவாக "மத்திய கல்லூரிகளில்" படித்த சிங்கள, தமிழ் மொழி மூலமாக கல்வி பெற்ற கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பல பட்டதாரிகள் நன்மையடைந்தனர்.

இத்தகைய கிராமப் பகுதி மாணவர்களின் எண்ணிக்கை நகரப் பகுதி மாணவர்களை விடக் கூடுதலாக இருந்தது. இது தொடர்ந்து பேணப்பட்டதா என்பது வேறு விவகாரமாகும்.

எவ்வாறாயினும், 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டதும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுதந்திரமும் அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டு, அமைச்சர் மட்ட அதிகாரங்கள் மேம்படுத்தப்பட்டன. 1970 களுக்கு முன்னர் சோல்ஸ்பொறி அரசியல் யாப்பில் வெளிநாட்டு விவகாரப் பதவிகள், பாதுகாப்புடன் இணைக்கப்பட்டு, பிரதமரின் கட்டுப்பாட்டில் இருந்தன. சில ஆண்டுகளில் வெளிநாட்டு சேவைக்கான ஆள் சேர்த்தல் நேர்காணல் அடிப்படையில் மாத்திரம் தங்கியிருந்த வேறு சில ஆண்டுகளில் எழுத்து மூலம் இவை இடம்பெற்றன.

## 2. வெளிநாட்டு சேவைக்கான விதிமுறைகளும், சில பின்னணித் தகவல்களும்.

(a) தற்போதுள்ள இலங்கை வெளிநாட்டு சேவை (Sri Lanka Foreign Service - SLFS) குறிப்பு[10] (இனி சுற்றுக் குறிப்புப்படி) இலங்கையின் வெளிநாட்டு சேவையைப் பரிபாலிக்கும் விதிமுறைகளை உள்ளடக்கியது. சில முக்கிய ஏற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) குறிப்புகள் சகல வெளிநாட்டு சேவை அங்கத்தவர்களுக்கும் பொருந்தும்

(ii) 7வது வாசக நிபந்தனைகளின்படி SLFS இலங்கை வெளிநாட்டு சேவை உறுப்பினர்களை மாத்திரம் கொண்டிருக்கும்

(iii) குறிப்பின் 8.1 வாசக நிபந்தனைப்படி வெளிநாடுகளில் நியமிக்கப்படும் SLFS உத்தியோகத்தர்களின் ராஜதந்திர தரங்கள் பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| மூன்றாவது செயலாளர் | - SLFSஇல் III ஆம் தரத்துக்கான நியமனத்தின் பேரில் |
| இரண்டாவது செயலாளர் | - SLFS இல் III ஆம் தரத்தில் 4 ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்து இக்காலப்பகுதியில் சகல வருடாந்த படி உயர்வுகளையும் பெற்றிருத்தல். |
| முதலாவது செயலாளர் | - SLFS இல் III ஆம் தரத்தில் 7 ஆண்டுகளை பூர்த்தி செய்து இக்காலப பகுதியில் சகல வருடாந்த படி உயர்வுகளையும் பெற்றிருத்தல். |
| ஆலோசகர் | - SLFS இன் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றிருத்தல் |
| அமைச்சர்கள் ஆலோசகர் | - SLFS இன் II ம் தரத்தில் 2 ஆண்டுகளைப பூர்த்தி செய்து இக்காலப் பகுதியில் சகல வருடாந்த படி உயர்வுகளையும் பெற்றிருத்தல். |
| அமைச்சர் | - SLFE இன் II ஆம் தரத்தில் 7 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இக்காலப் பகுதியில் சகல வருடாந்த படி உயர்வுகளைப் பெற்றிருத்தல். |

[10] அதி விசேட வர்த்தமானி 24.01.2004 திகதியிடப்பட்டது.

(iv) SLFS உறுப்பினர்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர்.

(v) பதவி அமர்த்தல் III ம் தர மட்டத்திலும், ஆட் சேர்த்தலுக்கான திட்டத்தின் பிரகாரமும் நிகழும்.

(b) தற்போது எத்தனை மொத்த ஊழியர்கள் வெளிநாட்டு தூதரகங்களில் வேலை பார்க்கிறார்கள் என்பது பற்றிய உத்தியோகபூர்வ தகவல் எதுவும் அரசாங்க அதிகார மட்டத்தில் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் உத்தியோக பூர்வமற்ற முறையில் SLFS இல் 169 உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்று தெரிய வருகிறது.

(c) வெளிநாட்டு தூதுக் குழுக்களின் எண்ணிக்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை என்பன பற்றி இங்கு குறிப்பிடுவதற்கான அவசியமில்லை 2008 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வெளிநாட்டு விவகார அமைச்சு தொடர்பாக பின்வரும் தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

i. 57 நாடுகளில் 59 இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்கள் உள்ளன. அமைச்சில் மொத்தம் 476 ஊழியர்கள் உள்ளனர். 769 ஊழியர்கள வெளிநாட்டுத் தூதரகங்களில் பணிபுரிகின்றனர்.

ii. வெளிநாட்டு விவகார அமைச்சின் முக்கிய செயற்பாடுகள், கொள்கை அமுலாக்கம், வெளிநாட்டு விவகார அமைச்சின் முக்கிய செயற்பாடுகள், கொள்கை அமுலாக்கம், வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள், தொடர்பான திட்டங்களும், நிகழ்ச்சிகளும், இலங்கையின் சர்வதேச உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள், வெளிநாட்டுப் பிரசாரம், தூதரக செயற்பாடுகள், ராஜதந்திர காப்புரிமைகள், உரிமைகள் என்பவற்றை இலங்கை சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தல்.

iii. இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை பேணுவதும், வெளிநாடுகளில் இலங்கையின் நலன்களைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கான பொறுப்பும் SLFS சார்ந்ததாகும்.

### 3. நியமனங்கள் பற்றிய பொது மக்களின் கண்டனங்கள்

பிரசுரமான கட்டுரைகள் விமர்சனங்கள்[11] ஆகியவற்றின் பகுப்பாய்வு பின்வரும் விடயங்களை மையமாகக் கொண்டு அக்கறை காண்பிக்கப்பட்டதைப் புலப்படுத்துகின்றன.

- 1970 களின் பின்னர் வெளிநாட்டு சேவையை அரசியல் மயமாக்குவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இதற்கு முன்னரும் ஆங்காங்கு வெளிநாட்டு சேவைக்கு அரசியல் ரீதியான நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.
- அரசியல் மயமாக்கல் காரணமாக வெளிநாட்டு சேவை சீர்குலைந்தது, முக்கியமாக குறிப்பிட்ட அரசாங்கங்களினால் வெளிநாட்டு சேவைப் பதவிகளுக்கு தகுதியற்றோர் (அரசியல் செல்வாக்குள்ளோரினால் தெரிவு செய்யப்பட்டோர்) நியமிக்கப்பட்டமை.
- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து நியமன அதிகாரங்களை அமைச்சரவை பறித்தெடுத்து தொடராக நியமனங்களைச்[12] செய்யத் தொடங்கியமை.

[11] முக்கியமாக ஆங்கில புதினப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்களில், பிரபல முன்னாள் ராஜதந்திரி நந்தா கொடகேயினால் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொடர்கள்.

[12] பின்வரும் நியமனங்கள் அண்மையில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(a) சந்திரபால லியனகே - தற்சமயம் ஊடக ஒருங்கிணைப்புச் செயலாளர் ஜனாதிபதி அலுவலகம், ரோமில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அமைச்சர் ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

(b) லக் குமார கமகே (உயர் தொழில்நுட்ப அமைச்சின் முன்னாள் செயலாளர் மொஸ்கோவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அமைச்சராக நியமிக்கப்படவிருக்கிறார்.

(c) K.D.S. ருவான் சந்திர (SLAS – தரம் 1) 2008.09.01 முதல் பெய்ருட்டில் அமைச்சர் ஆலோசகராக

- Consul General அமைச்சர் ஆலோசகர், இரண்டாவது செயலாளர், முதலாவது செயலாளர்[13] போன்றோர் உட்பட பல ராஜதந்திரப் பதவிகளுக்கு அரசாங்கம் அல்லது அதிகாரத்தில் இருக்கும் கட்சியினருடன் தொடர்புபட்டவர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டமை, காலத்திற்குக் காலம் சிற்றூழியர்கள் உட்பட பியோன், லிகிதர், சாரதிகள், சமையல்காரர்கள் போன்றவர்களும் அரசியல் ஆதரவுடனேயே நியமிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.
- ராஜதந்திரிகள் உள்ளிட்ட கேள்விகளுக்குரிய இந்த நியமனதார்களுக்கு நாட்டின் வெளிநாட்டு உறவுகள் பற்றிய அறிவோ அனுபவமோ கிடையாது. இதனால் இந்த நியமனங்களினால் நாட்டின் பெயர் பெரிதும் பாதிக்கப்படும்
- வெளிநாட்டு சேவையின் ஊழியர் பதவிகளுக்கு, அனுபவமற்ற, கல்வித் தகமையற்ற வெளியாட்களை நியமிப்பதன் SLFS மூலம் உத்தியோகத்தர்களிடையே விரக்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விரக்திக்கு மேலாக இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் SLFS பதவிகளுக்கு[14] நியமிக்கப்படுகின்றனர்.

## 4. சட்ட நிலைமை

ராஜதந்திர நியமனங்களை நிர்வகிக்கும் சட்டக் கட்டுக் கோப்பை விளங்கிக் கொள்ளும் நோக்கத்துடன் அரசியல் யாப்பு ஏற்பாடுகளும் SLFS குறிப்பும் ஆராயப்பட வேண்டும்.

[13] SLFS பின்னணியும், வெளிநாட்டு சேவை பற்றிய அறிவும் இல்லாத பலர் இலங்கையின் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை பற்றி புதினப் பத்திரிகை கட்டுரைகள் மற்றும் எமது சொந்த ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. சில விபரங்கள் கீழ் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | இலங்கைத் தூதரகம் |
|---|---|---|
| ஜாலிய விக்ரமசூரிய | Consul General | லொஸ் ஏன்ஜலிஸ் |
| போதி அத்தாவுட | Consul General | பிராங்போர்ட் |
| பி.கணேகொட | அமைச்சர் ஆலோசகர் | புது டில்லி |
| எச்.எம்.எம்.திஸாநாயக்கா | அமைச்சர் ஆலோசகர் | சோல் |
| எஸ். குணரட்ண | அமைச்சர் ஆலோசகர் | பாங்கொக் |
| ரி.அத்தநாயக்க | அமைச்சர் ஆலோசகர் | ஜப்பான் |
| வால்ட்டர் ஜயவர்த்தன | அமைச்சர் ஆலோசகர் | லண்டன் |
| சுஜீவர சேனாதிராஜ | அமைச்சர் ஆலோசகர் | பாரிஸ் |
| தாமர குணாயகம் | அமைச்சர் ஆலோசகர் | பிறேசில் |
| எம்..ஜே.ஏ.பெர்னாந்து | ஆலோசகர் | ரோமாபுரி |
| ஐ.பி.கருணஜீவ | ஆலோசகர் | லண்டன் |
| அமிந்தா றொட்றிகோ | இரண்டாவது செயலாளர் | வாஷிங்டன் |
| சுாமர ரணவீர | மூன்றாவது செயலாளர் | இஸ்லாமாபாத் |

[14] கீழ்வரும் உத்தியோகத்தர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர் (ஞாயிறு ஐலண்ட் 9 மார்ச் 2008)
(a) H.G.U. புஷ்பகுமார - ஆலோசர் - சிட்னி
(b) W.A. விஜேரட்ன - அமைச்சர் - ரோமாபுரி
(c) E.M.S.B ஏக்கநாயக்க D.G - நிர்வாகம்
(d) K.N.J கூரே –சிரேஷ்ட உதவிச் செயலாளர்

### 4.1 தூதுக்குழுக்களின் தலைவர்கள்:- ஜனாதிபதி அதிகாரங்களின் நோக்கு

33(C) வாசக நிபந்தனைகளின்படி ஜனாதிபதி தூதுவர்களை உயர் ஸ்தானிகர்களை, முழு அதிகாரம் பெற்ற தூதர்கள், மற்றும் ராஜதந்திர முகவர்கள் ஆகிய ஒப்புதல் பெற்றவர்களை நியமிக்கும் அதிகாரத்தை கொண்டிருப்பார். அதிகாரம் கொண்டுள்ள எவரும் அதனை ஒருதலைப்பட்சமாக பிரயோகிக்க முடியாதென்றும், அரச அதிகாரம் மக்களின் நன்மைக்காக நம்பிக்கையுடன் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும், இலங்கை உயர் நீதிமன்றத்தில் தொடரான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு முக்கிய அவதானிப்பு என்னவெனில் 33 (C) வாசகத்தின் கீழான ஜனாதிபதியின் அதிகாரம் ராஜதந்திர தூதுக்குழுக்களின் தலைவர்களின் நியமனத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் உத்தியோகத்தர் பதவிகளுக்கு பிரயோகிக்கப் படத்தக்கதல்ல.

ராஜதந்திர முகவர் என்ற பதம் பின்வரும் தரங்கள் ஒன்றில் தேசிய பிரதிநிதி என்று சட்டபூர்வமாக[15] விளக்கப்படுகிறது.

(i) தூதுவர்கள்
(ii) அரசியல் பேராளர் அல்லது முழு அதிகாரம் கொண்ட தூதுவர்கள்
(iii) இறமைக்குப் பொறுப்புள்ள அமைச்சரின் வதிவுப் பிரதிநிதி.
(iv) வெளிவிவகார அமைச்சருக்கு ஏற்புடைய விவகாரப் பொறுப்பதிகாரி.

இதனால் ஜனாதிபதிக்கு தூதுவர் குழுக்களின் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளது எனினும் இந்த அதிகாரத்தை ஏனைய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு பயன்படுத்த முடியாது (தூதுவர்கள் தூதுவக் குழுக்களின் தலைவர்கள் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள்)

இந்த ஜனாதிபதி நியமனங்கள் பரிசீலிக்கப்படுமா? தூதுக் குழுக்கள் உட்பட உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படும் எவரினதும் தகுதியை பரீட்சிக்க பாராளுமன்றத்தின் உயர் பதவிக் குழு உள்ளது. துரதிருஷ்டவசமாக உயர் பதவிக் குழு முற்று முழுதாக பயனற்றதாகவும், வெளிப்படை அற்றதாகவும், நோக்கம் எதனையும் நிறைவேற்ற முடியாததாகவும் உள்ளது.[16]

### 4.2 ஏனைய வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்கள் - யாரை நியமிக்கக் கூடும்?

குறிப்பின் 8.1 வாசக நிபந்தனைகளின்படி மேலே குறிப்பிட்டவாறு வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்கள் SLFS இலிருந்து தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படல் வேண்டும். SLFS க்கு வெளியே செய்யப்படும் எந்தவொரு நியமனங்களும், குறிப்புக்கு முரணானது சட்ட ரீதியாக பிழையானதாகும்.

லிகிதர்கள் போன்ற வெளிநாட்டு சேவை தரங்களைச் சாராத ஏனைய உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சை மூலம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு நியமிக்கப்படல் வேண்டும். உதாரணமாக 2007 இல் அரசாங்க விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு 50 லிகிதர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.[17] இந்தப் போட்டிப் பரீட்சையைக் கருத்தில் கொள்ளாமல் அமைச்சரவை முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இல்லாமலும் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றாதவர்களுமான[18] பலரை நியமித்துள்ளது. இந்த நியமனங்களும் முகாமைத்துவ சேவைக் குறிப்புக்குப் புறம்பானவையாகும்.

### 4.3 தூதுக் குழுக்களின் தலைவர்களினது அதிகார சபையை நியமித்தல்.

அரசியல் யாப்பின் 17வது திருத்தப் பிரகாரம் சகல அரசாங்க சேவை நியமனங்களும், அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். SLFS குறிப்புக்களின்படி இந்த நிலைமை அவ்வாறே உள்ளது. எனினும் தூதுக்குழுக்களின்

[15] பிளேக்கின் சட்ட அகராதி
[16] முக்கிய உயர் பதவிகள் இலங்கை Transpency International Sri Lanka 2004 பக்கம் 22
[17] வெளிநாட்டு சேவை அமைச்சின செயலாளர் பாலித்த கொஹெனவில் வெளியிடப்பட்ட 2007-05-25 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி
[18] உதாரணமாக திரு.P.G.P.B சிறிசேனவும், ஆ.மு.விஜயவும் லண்டனிலும் சிட்னியிலும் லிகித உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 2008-04-23 அமைச்சரவை தீர்மானப்படி 2008 - 06 - 01 முதல் இந்த நியமனங்கள்.

எனவே ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதா என்பது இங்கு வினவப்பட வேண்டிய கேள்வியல்ல. ஆனால் தூதுக்குழுக்களின் நோக்கங்கள் அடிப்படையில் தகுதியான தூதரகத்தின் தலைவா்கள் நியமிக்கப்படுகிறாா்களா என்பதே கேள்வியாகும்.

**4.4. ஏனைய தூதுக்குழு உத்தியோகத்தா்களின் அதிகார சபையை நியமித்தல்.**

வெளிவிவகார அமைச்சில் அல்லது வெளிநாட்டு தூதுக்குழுக்களில் எதிலாவது ராஜதந்திர தரங்களில் பதவிகளை நியமிக்கும் ஏகோபித்த அதிகாரம் அரச சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

வெளிநாட்டு அமைச்சா் போன்றோரின் சிபாா்சின் பேரில் அமைச்சரவை தற்போது பல்வேறு நியமனங்களை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. எனவே இத்தகைய நியமனங்களைச் செய்வதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளதா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அரசியல் யாப்பின் 17வது திருத்தத்தில் உள்ள குறிப்பிட்ட ஏற்பாடு பின்வருமாறு தெரிவிக்கின்றது.

- “வாசகம் 55(1) அரசாங்க உத்தியோகத்தா்களின் நியமனம், பதவியுயா்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் என்பன (அரச சேவை) ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- 55(3) இந்த வாசகத்தின் (1) பந்தி ஏற்பாடுகளுக்குப் புறம்பாக கொள்ளாது சகல திணைக்களங்களின் தலைவா்களினது நியமனம், பதவியுயா்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன அமைச்சரவை அமைச்சா்களின் பொறுப்பில் உள்ளது. ஆணைக்குழுவின் கருத்துக்களை உறுதிப்படுத்திய பின்னா் அமைச்சா்கள் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவா்.

- 55(4) அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அமைச்சா்கள் அரசாங்க உத்தியோகத்தா்கள் தொடா்பான சகல கொள்கை விடயங்களையும் தீா்மானிப்பாா்கள்.

அமைச்சரவை உறுப்பினா்களுக்கு வெளிநாட்டு சேவைக்கான தரங்களுக்கு நியமனங்கள் செய்வதை அனுமதிக்கும் எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. SLFS குறிப்பின் பிரகாரம் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் செய்யப்படும் வெளிநாட்டு சேவைத் தரங்கள் வருமாறு.

மூன்றாவது செயலாளா்
இரண்டாவது செயலாளா்
முதலாவது செயலாளா்
ஆலோசகா்
அமைச்சா் ஆலோசகா்
அமைச்சா்

இதனால் SLFS க்கு புறம்பாக அமைச்சரவை மேற்கொள்ளும் நியமனங்கள் சட்டத்தை மீறுவதுடன், சட்ட விரோதமானவை என்பது தெளிவாகிறது.
மேலும் அமைச்சரவை வெளிநாட்டுத் தூதுக் குழுக்களுக்கு லிகிதா்களை நியமனம் செய்வதும், அரசியல் யாப்பின் 17 வது திருத்தத்திற்கு முரணானதாகும்.

**4.5 வெளிநாட்டு சேவை பதவி நிலைகளுக்கு SLAS நியமனப் போக்குகள்.**

பல இலங்கை நிா்வாக சேவை உத்தியோகத்தா்கள் எந்த விதமான அடிப்படைகளின்றி அமைச்சரவையினால் தெரிவு செய்யப்பட்டு, வெளிநாட்டு சேவையின் பல பதவிகளில் நியமிக்கப்படுவதற்கான சான்றுகள் தென்படுகின்றன. இதற்கு தகுந்த நியாயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ராஜதந்திரப் பதவிகளுக்கு தமது அபிமானிகளை அரசியல் அதிகாரிகள் தோ்ந்தெடுப்பதை அனுமதிக்கும் செயலாகவே இது அமைந்துள்ளது. இது குறிப்பிற்கு முரணானது எனவே அரசியல் யாப்புக்கும் ஒவ்வாததாகும்.

SLFS ஒரு நிபுணத்துவ சேவையாகும். அது இலங்கை நிர்வாக சேவையும் நாட்டில் அதனுடன் இணைந்த சேவைகளுக்கும் சமமானது. எனினும் அதன் பங்கு, ஏனைய சேவைகளைப் பார்க்கிலும் வேறானது. SLFS உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுடன் இரு தரப்பு, பல்தரப்பு உறவுகளை ஒன்றிணைத்தல் பொறுப்பைக் கொண்டுள்ளனர். அத்துடன் நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.

SLFS உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்து இலங்கைக்கு நற்பெயரும் புகழும் ஈட்டித் தருவதில் ஏனைய நாடுகளின் உத்தியோகத்தர்களுக்கு சளைத்தவர்களாக இல்லை.

### 5. தகவல்கள் முடக்கப்படுதல்.

பின்வரும் விடயங்களில் பொது மக்களுக்கு தகவல்கள் கிடைப்பதில்லை.

(a) வெளிநாட்டுத் தூதரங்களில் உத்தியோகத்தர் நியமனத்துக்கான தேர்வு முறை

(b) குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோத்தர்களின் பெயர்கள் அவர்களின் பின்னணி, அத்துடன் நியமனம் செய்த அதிகாரபீடம்.

(c) SLFS பதவிகளை வகிக்க, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதற்கான அடிப்படை.

(d) SLFSஇன் தற்போதைய பதவிகள், வெற்றிடமிருப்பின் எத்தகைய வெற்றிடம்

(e) வெளிநாட்டு தூதரகங்களில் நியமிக்கப்படாத SLFS உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை.

### 6. வெளிநாட்டு சேவைக்கான நீதி விரோத நியமனங்களின் விளைவுகள்.

(a) முன்சொன்ன நியமனங்கள் மூலம், அமைச்சரவை அல்லது அரசின் நிறைவேற்று அதிகாரம் குறிப்பேட்டின் பின்னிணைப்பு A நிபந்தனைகளின்படி நியமனங்கள் செய்யும் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துள்ளன.

(b) முன் சொன்ன நியமனங்கள் செய்வதைத் தொடர்வதன் மூலம் SLFS அரசியல் மயமாக்கப்பட்டிருப்பதுடன், இலங்கையின் ஊக்குவிப்பு பாதுகாப்பு என்பனவற்றை அபாயத்திற்கு உள்ளாக்கி நாட்டின் வெளிநாட்டு உறவுகளைக் கேலிக் கூத்தாக்கி உள்ளது.

(c) SLFS அல்லது ஊழியர்களை நியமனம் செய்வதற்கான தேர்வுமுறை எதுவுமில்லை. இதனால் முன்சொன்ன பதவிகளுக்கு முன் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை தெரிவு செய்து பதவிக்கமர்த்துவது இலங்கையின் வெளிநாட்டு உறவுகளுக்கு பாதகமானதாகும். இந்த கேள்விக்குரிய நியமனங்கள் SLFS இல் தகுந்த முறையில் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களின் தார்மீகத்திற்கு பெரும் பாதிப்பாக உள்ளது.

(d) நிறைவேற்று அதிகாரி மக்களின் நம்பிக்கையாளராதலால் சட்ட விதியின் கட்டுக்கோப்புக்குள் செயற்பட வேண்டியவராவார். திடீர் நியமனங்கள் குறிப்பேட்டிற்கும், எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் கடைப்பிடிக்கப்படும் விதிகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும், நடைமுறைகளுக்கும் அப்பாற்பட்டவையாகும்.

(e) இந்த நடைமுறை காரணமாக நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நஷ்டங்கள் குறித்து அல்லது சர்வதேச மதிப்பு இழக்கப்பட்டமை பற்றி தீவிரமான மதிப்பீடு எதுவும் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், இந்த சீர்கேடான நடவடிக்கைகள், பொருளாதாரத்திற்கும் வெளிநாட்டு உறவுகளுக்கும் கணிசமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கருதக் கூடியதாக உள்ளது. மேலும் சிறந்த தரமும் திறமையும் உள்ள இளைஞர்கள் இத்தொழிலில் சேர்க்கப்படுவதை இது வெகுவாகப் பாதித்துள்ளது. இதன் காரணமாமக இவ் இளைஞர்களும் அரசியல் ஆதரவுடன் ஒரு பதவியைப் பெறுவதற்கு முயற்சிப்பார்கள்.

[19] www.cabinettooffice.gov.uk/prorerty_and_ethics.

## 7. வெளிநாட்டு சேவை எதிர்பார்ப்புகள்.

(a) ராஜதந்திர சேவை உத்தியோகத்தர்கள், நாட்டின் நலன்களை வெளிநாடுகளில் ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவார்கள் என்பது தெரிந்த விடயமாகும். சர்வதேச ரீதியாக நாட்டினதும், அதன் மக்களினதும் நலன் உள்ள ஒவ்வொரு துறையிலும் அவர்களின் பணிகள் உள்ளடக்கப்படுகின்றன.

(b) பிரிட்டிஷ் ராஜதந்திர சேவை மற்றும் வளர்ந்த நாடுகளின் ஏனைய பல வெளிநாட்டு சேவைகளைக் கணிப்பிடுகையில் பின்வரும் முக்கிய நலன்கள், ராஜதந்திர சேவையினால் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

அரசியல் - செல்லும் நாட்டில், அரசியல் பேணுவதும், அரசியல் உறவுகளை விருத்தி செய்வதும், பொருளாதார உறவுகளை ஊக்குவிப்பதும், அத்துடன் தம்மை அனுப்பும் நாட்டுக் கொள்கைகளை அந்நாட்டுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் சரிவர விளக்கப்படுவதை உறுதி செய்வதுமாகும்.

வர்த்தகம் - அந் நாட்டின் வர்த்தக நிறுவனங்கள் தமது பொருட்களையும், சேவைகளையும் அனுப்பும் நாட்டிற்கு கிடைக்க வகை செய்தல், உள்ளூரில் முதலீடுகளை ஊக்குவித்தல், அந்நாட்டின் சட்டங்கள் உள்ளுர் கம்பெனிகளுக்கு பாரபட்சமாக இல்லாத விதத்தில் இருப்பதை உறுதி செய்தல்.

ஆலோசகர் - அந்நாட்டில் வசிக்கும் அல்லது விஜயம் செய்யும் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்குதல், தனது நாட்டிற்கு வரும் அந்நாட்டுப் பயணிகளின் விண்ணப்பங்களை ஒழுங்குபடுத்துதல்.

(c) இந்த முக்கிய அம்சங்கள், ராஜதந்திர உத்தியோகத்தர்களின் செயற்பாட்டிற்கு அவசியமானவை. இதனால் ராஜதந்திர உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதற்கான தெரிவு கவனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். தொழில் திறனும், புத்திசாதுரியமும் மதிக்கப்படும் சகல நாடுகளிலும், ராஜதந்திரப் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதில் விதிகளும், நடைமுறைகளும் கடுமையாக அனுசரிக்கப்படுவதுடன், வெளிப்படையாகவும் உள்ளன. இது சிறந்த தகைமையுள்ளோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட வகை செய்கிறது.

(d) நவீன ராஜதந்திரத்தில், முக்கியமான அம்சம், பொருளாதார ராஜதந்திரத்தில் ஈடுபடுத்துவதாகும். சர்வதே வர்த்தக முதலீடுகளை ஊக்குவித்தல், செயற்படும் சந்தைகளை விருத்தி செய்தல், செலவினத்தையும், எல்லை கடந்த பணப் பரிமாற்ற அபாயங்களையும் குறைத்தல், சர்வதேச தொலைத் தொடர்புகள், எரிபொருள், போக்குவரத்து வலையமைப்பு, என்பவற்றை விருத்தி செய்தல், ஆகியவற்றில் அரசியல் செல்வாக்கையும், உறவுகளையும் பிரயோகித்தல் இதில் அடங்கும். பொருளாதார ராஜதந்திரத்தில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பிரயோகித்தலையும், பொருளாதார அறிவு மற்றும் IMF, WTO உலக வங்கி என்பன பற்றிய அறிவுடனான பொருளாதார அறிவையும் உள்ளடக்கும். விட்டுக் கொடுக்கும் தன்மை தகுந்த கணிப்பு, வலுவான வர்த்தக திறன்கள் என்பனவும், பொருளாதார ராஜதந்திர செயற்பாடுகளுக்கு தேவைப்படுகிறது.

(e) சகல ராஜதந்திர சேவை உத்தியோகத்தர்களும் நீதியான திறந்த பரீட்சை அடிப்படையில் திறமை மூலம் நியமிக்கப்படுதல் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாகும். பிரிட்டனின் ராஜதந்திர சேவைக்கான ஒழுக்கச் சேவை, ராஜதந்திர சேவைக்கான முக்கிய விழுமியங்கள் “நேர்மைத்திறன்” சத்தியம் இலக்கு, பாரபட்சமின்மை[19] என்பனவாகும், அவை பின்வருமாறு விளங்கப்படுகின்றன.

“நேர்மைத் திறன் என்பது, உங்கள் சொந்த நலனுக்கு மேலாக பொதுச் சேவைக் கடப்பாடுகளைப் பேணுதல்.

“நேர்மை” என்பது உண்மையாகவும், திறந்த மனப்பான்மையுடனும் இருத்தலாகும்

“இலக்கு” என்பது உங்கள் ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் சாட்சியத்தை தீவிரமாகப் பகுப்பாய்வதில் தங்க வைப்பதாகும்”

“பாரபட்சமின்மை” ஒரு விடயத்தின் தகுதி அடிப்படையில் மாத்திரம் நடவடிக்கை எடுப்பதும், பல வேறுபட்ட அரசியல் போக்குகள் உள்ள அரசாங்கங்களுக்கும் சம நிலையில் பணியாற்றுதலாகும்.

[19] www.cabinettooffice.gov.uk/prorerty and ethics.

## 8. முடிவுகள்.

(a) நவீன கோட்பாட்டின்படி நாட்டில் வெளிநாட்டு உறவுகளை நடத்தும் திறமையுள்ள தொழில்சார் வெளிநாட்டு சேவையை எந்தவொரு இறைமையுள்ள அரசும் கொண்டிருக்க வேண்டும். நாட்டின் நலனை ஊக்குவித்துப் பாதுகாப்பது முக்கியமானதும் அரசுக்கு நன்மை பயப்பதாகவும் இருத்தல் வேண்டும். உள்ளூரில் தவறுகளை மூடிமறைக்கும் நோக்கத்தை வெளிநாட்டு சேவை கொண்டிருத்தல் கூடாது. ஆனால் ஒத்துழைப்புடனும், புனிதமான முறையிலும் வெளிநாட்டு விவகாரங்களைக் கையாள வேண்டும்.

(b) இலங்கையின் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் 2006 ஒக்டோபர் 4 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ் உரையாற்றுகையில் - நாடுகளிடையே பேச்சுக்கள், பேரம் பேசுதல் மூலம் ஒருவரின் நாட்டிற்கு ஆகக் கூடுலான நன்மைகளைப் பெற முற்படுதல் ராஜதந்திரம் எமது வெளிநாட்டு சேவை இந்தப் பணியை சிறப்பாகச் செய்துள்ளது என்று என்னால் கூற முடியவில்லை. இதனைச் சொல்வதற்கு வருந்துகிறேன்"- என்று கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில் "ஒவ்வொரு வெளிநாட்டு தூதுதரங்களிலும் செலவிடப்படும் பணத்திற்காக முழு நன்மையையும் நாம் பெறுகின்றோமா பணக் கோட்பாட்டிற்கான பெறுமதியில் இருந்து இதனை நிர்ணயிக்க வேண்டும்." என்றார். உறவினர்களுக்கான சலுகை இல்லாமல் தொழிற் திறனுள்ள வெளிநாட்டு சேவையை ஏற்படுத்த உண்மையான கடப்பாடுடன் இந்த பாரதூரமான நிலைமையை கவனித்தல் வேண்டும்.

(c) நான்கு தசாப்த காலமாக நாட்டிற்கு குந்தம் விளைவிக்கக் கூடிய முறையில் இலங்கை வெளிநாட்டுச்சேவை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளமை வெளிப்படையானதொன்றாகும். வெளிநாட்டு சேவைகள் தொடர்பாக நாட்டின் அரசியல் தலைமைத்துவம் உதட்டளவிலேயே செயற்படுகிறது. லிகிதர் சேவை உட்பட வெளிநாட்டு சேவைக்கு சகல மட்டங்களிலும் எதிர்காலத்தில் நியமனங்கள் தகுதி அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் காலத்திற்குக் காலம் பகிரங்க அறிவித்தல்கள் விடுத்துள்ளனர். ஆனால், நடைமுறை மாறாக உள்ளது. உதாரணமாக 2004 ஆகஸ்ட் 14 இல் ஒரு பத்திரிகை அறிக்கை வெளிநாட்டு அமைச்சினால் வெளியிடப்பட்டது. பதவி நியமனத் திட்டத்திற்குப் புறம்பாக தவறான நியமனங்கள் எதுவும் செய்யப்படமாட்டாது. வெளிநாட்டு தூதரகங்களுக்கு தொழிற்றிறன் உள்ளவர்களே தகவல் ஆலோசகர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டது, ஆயினும் இது பின்பற்றப்படவில்லை என்பதற்கு தெளிவான சாட்சியம் உள்ளது.

(d) 17ஆவது திருத்தம் அமுல் செய்யப்படாமை அரசியல் யாப்பு மன்றம் சட்டபூர்வ அரச சேவை ஆணைக்குழு என்பவற்றை நியமிக்கத் தவறியமை பாரதூரமான விடயங்களாகும். உயர் பதவிகள் குறித்து பாராளுமன்ற கண்காணிப்பின் இயலாமை என்பன பதவி நியமன வழிமுறையின் நேர்மைத்திறனை தீவிரமாகப் பாதிக்கும்.

(e) வெளிநாட்டுச் சேவையின் உயர் பதவிகளுக்கு தகுதியற்ற தேவையற்ற நியமனங்கள் செய்யப்படுவது தொடர்கிறது. இந்த நடைமுறை SLFS ஐ தார்மீக முறையில் பாதித்துள்ளது. அரசியல் தலையீட்டின் காரணமாக சேவையின் தரம் தொடர்ச்சியாகப் பெரிதாகப் பாதிக்கப்படுவதன் ஊடாக சேவை சீர்குலையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

(f) தூதுக்குழுக்களின் தலைவர்களினது நியமனங்கள், ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பினும், தகுந்த உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்வு முறை வெளிப்படுத்தப்படல் வேண்டும். வெளிநாட்டுச் சேவைக்கு வெளியே பலம் வாய்ந்த அரசியல்வாதிகளின் நேரடித் தொடர்பு உள்ளவர்களே நியமிக்கப்படுகின்றனர். இவர்களின் தகைமை (பின்னணி, தரம், தன்மை) கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

(g) குறிப்பேட்டிற்கு வெளியே பதவிகள் நிரப்பப்படுவதோடு அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தை அமைச்சரவை பறித்துள்ளது. இந்த முறைகேடான நியமனங்களை எதிர்ப்பதற்கு அரச சேவை ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. முறைகேடான நியமனங்கள் குறித்து ஊடகங்களில் பல தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் ஜனாதிபதியோ, வேறு எந்த ஒரு அதிகார பீடமோ, இந்த நிலைமையை நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(h) உள்நோக்குடன் முறைகேடான நியமனங்கள் செய்யப்பட்டிருப்பின் அது ஊழல் நடவடிக்கையாகும். தகுதியற்றவர்களை நியமிப்பதன் மூலம் நியமனங்களைச் செய்யும் அதிகாரிகள், கட்சிகளுக்கு நன்மைகளை எதிர்பார்ப்பது வெளிப்படையாகும். இதன் விளைவாக இந்த நியமனங்களுக்கான முழு நடைமுறையும், அரசாங்கத்திற்கு சட்ட விரோதமான முறையில் கேடு விளைவிப்பவையாகும்.

(i) ராஜதந்திரிகளாக செயலாற்றும் தகைமைகள் இல்லாத வெளியார், வெளிநாட்டு சேவைக்கு நியமிக்கப்படுவது தற்சமயம் அச்சேவையை தார்மீக ரீதியில் களங்கப்படுத்துகிறது. வெளிநாட்டு சேவையை அழிக்கும் இந்த வழிமுறை உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் இலங்கைக்கு பாரிய சீர்கேடு ஏற்படும் விதத்தில் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய நலனுக்கு முக்கியத்துவம் வழங்கப்படமாட்டா.[20]

## 9. விதந்துரைகள்

a) SLFS பரிபாலனத்தின் கீழ் செய்யப்படும் சகல நியமனங்களும், SLFS உத்தியோகங்களிலிருந்து, அரச சேவை ஆணைக்குழுவினாலேயே கட்டாயமாக நிரப்பப்படல் வேண்டும். அரசியல் யாப்பின் 17வது திருத்தத்திற்கு முரணாக எந்தவொரு கட்டத்திலும் அமைச்சரவை இந்த அதிகாரங்களைப் பிரயோகித்தல் கூடாது.

b) இதே போன்று தூதுக் குழுக்களில் முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களும் திறமையின் பேரில் போட்டிப் பரீட்சை மூலமே செய்யப்படல் வேண்டும்.

c) தூதுக்குழுக்களின் தலைவர்கள் உட்பட நியமனங்கள் செய்யப்படும்போது அரசியல் யாப்பு அதிகாரத்தை நாட்டின் தலைவர் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு சகல பாதுகாப்புகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய நியமனங்களுக்கு அறிவிக்கப்பட்ட பதவி வழிமுறை, பாராளுமன்றத்தினாலும் மற்றும் அரசியல் யாப்பு சபையினாலும் செயற்திறனுள்ள வெளிப்படையான நுண்ணாய்வு என்பன இதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

d) வெளிநாட்டுச் சேவையில் கேள்விக்குரிய ஆட்சேர்ப்புகளைத் தடுப்பதற்கு சர்வதேச சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் பதவி வழிமுறை வகுக்கப்பட்டு, ஏற்கப்பட்டு , பின்பற்றப்படல் வேண்டும்.

e) நியமிக்கப்படுபவர்கள், தெரிவு நடைமுறை என்பன பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவும், வெப்தளத்தில் எப்பொழுதும் கிடைக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

f) இலங்கைக்கு பயனுள்ள ராஜதந்திர ஒழுக்கநெறிக் கோட்பாடு இல்லை. மேலே குறிப்பிடப்பட்டவாறான தனிப்பட்ட ஆட்சேர்ப்புகள் ராஜதந்திர சேவையை, முக்கியமாக நேர்மைத்திறன், உண்மை, இலக்கீடு,பராபட்சமற்ற தன்மை என்பனவற்றின் தரத்தைக் குறைத்துள்ளது. துரதிஷ்டவசமாக இந்த நடைமுறைகளைத் தொடருவதன் மூலம் , ராஜதந்திர சேவை (இல்லாவிடில் அதன் இலக்குகளை எய்தக்கூடியது) இலங்கையின் ராஜதந்திர சேவையிடம் எதிர்பார்க்கப்படும் மைய விழுமியங்களை எய்த முடியாத நிலையிலுள்ளது.

[20] Ms.Manel Abeysekere, former Diplomat presentation at OPA – Annual Sessions 2008